உ

சிவமயம்



ஊரெழு

அமரர்

# சிவஸ்ரீ ச. பால வைத்தியநாத சிவாச்சாரியார்

அவர்களின்


# நினைவு மலர்

01 - 05 - 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம்மலர் தந்தோம் நாம்



# சமர்ப்பணமாக

❀

ஈழத்து யாழ்ப்பாண ஊரெழுவூர் இறையோற்கே
குறைவில்லாப் பூசை செய்து நல்ல வையத்து
உயர்ந்த குருவாய் பல்லாண்டு வாழ்ந்திருந்து
பார்போற்றும் பால வைத்தியநாத
சிவாச்சாரியார் சீர்போற்றச் சிவன்
திருவடிக்கே சென்றடைந்தார்.
அவர் தாழ் போற்றி இம்
மலர் தந்தோம் நாம்
சமர்ப்பணமே
இன்று.

**மனைவி, மக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சிவஸ்ரீ

# பால. வைத்தியநாத சிவாச்சாரியார்




## திதிவெண்பா

சீரார் வெகுதான்யத்தில் சேர் சித்திரை அபரம்
ஏரார் தசமியாம் ஏற்றதிதி - நேராரில்
பொன் பால வைத்தியநாத சிவாச்சார்யன் ஞாலம் விட்டு
பொன்னுலகு சென்றான் புகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேச பஞ்சரத்தினம்

முதாகராத்த மோதகம் ஸதாவிமுத்தி சாதகம்
கலாதராவதம் சகம் விலாசி லோக ரக்ஷகம்!
அநாயகைக நாயகம் விநாசி தேப தைத்யகம்
நதர்சுபாசு நாசகம் நமாமி தம் விநாயகம்!!

நதேதராதி பீகரம் நவோதிதார்க்க பாஸ்வரம்
நமத் சுராரி நிர்ஜரம் நதாதிகா பதுத்தரம்!
சுரேஸ்வரம் நிதீஸ்வரம் கஜேஸ்வரம் கணேஸ்வரம்
மகேஸ்வரம் தம் ஆஸ்ரயே பராத் பரம் நிரந்தரம்!!

ஸமஸ்த லோக சங்கரம் நிரஸ்த தைத்ய குஞ்சரம்
தரேதரோதரம் வரம் வரேப வக்த்ரம் அக்ஷரம்!
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்
மநஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம்!!

அதிஞ்சனார்த்தி மார்ஜனம் சிரந்தனோக்தி பாஜநம்
புராரி பூர்வ நந்தநம் சுராரி கர்வ கர்வ சர்வணம்!
ப்ரபஞ்ச நாச பீஷணம் தநஞ்ஜயாதி பூஷணம்
கபோல தாந வாரணம் பஜே புராண வாரணம்!!

நிதாந்த காந்த தந்த காந்திம் அந்தகாந்தகாத் மஜம்
தவசிந்த்ய ரூபம் அந்தஹீநம் அந்தராயக்ருந்தநம்!
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்த மேவ யோகிநாம்
தம் ஏகதந்தம் அத்புதம் விசிந்தயாமி ஸந்ததம்!!

மஹாகணேச பஞ்சரத்னம் ஆதரேண யோகவந்ஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மரன் கணேஸ்வரம்!
அரோகதாம் அகோஷதரம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதரம்
ஸமாஹிதாயுர் அஷ்டபூதிம் அப்யுபைதிசோகசிராத்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மலபாஸித சோபித லிங்க!
ஜன்மஜதுக்க விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்!!

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணாகர லிங்கம்!
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்!!

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்தன கா்ரண லிங்கம்;
ஸித்த ஸுராஸுரவந்தித லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்!!

கனகமஹாமணி பூஷித லிங்கம்
ஃபணிபதி வேஷ்ட்டித சோபித லிங்கம்!
தக்ஷஸ்யஜ்ஞ விநாசன லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்!!

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜஹார ஸுசோபித லிங்கம்!
ஸஞ்சிதபாப விநாசன லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதா்சிவ லிங்கம்!!

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர் பக்தி பிரேவச லிங்கம்!
தினகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்!!

அஷ்டடதலோபரி வேஷ்ட்டித லிங்கம்
ஸர்வஸ முத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர விநாசத லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்!!

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்!
பரார்த்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அஷ்டகம

அம்பா ஸாம்ப்பவி சந்த்ரமௌளி ரபலா பர்ணா உமா பார்வதீ
காளீ ஹைமவதீ ஸ்ரீவாத்ரிநயனீ காத்யாயனீ பைரவீ!
ஸாவித்ரீ நவயௌவனா ஸ்ரீபகரீ ஸாம்ராஜ்ய லக்ஷ்மீப்ரதா
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!!

அம்பா மோஹினி தேவதா த்ரிபுவனீ அனந்த ஸந்தாயிநீ
வாணீ பல்லவபாணீ வேணுமுரளீ காணப்ரீயா லோலிநீ;
கல்யாணீ உடுராஜ பிம்பவதனா தூம்ராக்ஷ ஸம்ஹாரிணீ
சித்ருபீ பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!!

அம்பா நூபுர ரத்னகங்கனதரீ கேயூர ஹாராவளீ
ஜாதீசம்பக வைஜயந்திலஹரீ க்ரைவேயகை ரஞ்ஜிதா!
வீணாவேணு விநோத மண்டிதகரா வீராஸனா ஸம்ஸ்திதா
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!!

அம்பா ரௌத்ரிணி பத்ரகாளி பகளா ஜ்வாலாமுகீ வைஷ்ணவீ
ப்ரஹ்மாணீ த்ரிபுராந்தகீ ஸுரதுதா தேதீப்ய மானோஜ்வவா!
சாமுண்டாபந்ரித ரக்ஷபோஷ ஜனநீ தா க்ஷாயணீ வல்லவீ
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!!

அம்பா பரலதனு: குபராங்குஸதரீ அர்தேந்து பிம்பாதரீ
வாராஹீ மதுகைடப பிரஸமனீ வாணீ ரமா ஸேவிதா!
மல்லாத்யாஸுர மூகதைத்ய தமனீ மாஹேபந்வரீ அம்பிகா
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!!

அம்பா ஸ்ருஷ்டி விநாஸபாவனகரீ ஆர்யா விஸம் ஸோர்பிதா
காயத்ரீ ப்ரணவாக்ஷராம்ருதரஸா பூர்ணாநுஸந்தீக்ருதா!
ஓங்காரீ வினதா ஸுராச்சிதபதா உத்தண்ட தைக்யர்பஹா
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!!

அம்பா ஸாஸ்வத ஆகமாதி ஷினுதா ஆர்யா மஹா தேவதா
யாப்ரஹ்மாதி பிபீலிகாநத ஜனனீ யாவை ஜகன் மோஹிநீ!
யா பஞ்ச ப்ரணவாதி ரேபஜனனீ பாசித்களா மாலிநீ
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!!

அம்பா பாலித பக்தராஜ தனிசம் அம்பாஷ்டகம் ய:படேத்
அம்பா லோல கடாக்ஷ வீக்ஷ லலிதம் சைச்வர்ய மவ்யாவறதம்!
அம்பா பாவன மந்த்ர ராஜபடனாத் அந்தேச மோக்ஷப்ரதா
சத்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா சாஸ்தா பஞ்சரத்தினம்

லோகவீரம் மஹா பூஜயம் சர்வ ரக்ஷா கரம் விபும்
பார்வதீ ஹ்ருதயானந்தம் சாஸ்தாரம் ப்ரணமாம் யஹம்


விப்ர பூஜயம் விஸ்வ வந்யம் விஷ்ணு சம்போ: பிரியம் ஸுதம்
க்ஷிப்ர பிரஸாத நிரதம் சாஸ்தாரம் ப்ரணமாம் யஹம்

மத்த மாதங்க கமனம் காருண்யாமிருக பூஜதம்
ஸர்வ விக்னஹரம் தேவம் சாஸ்ாரம் ப்ரணமாம் யஹம்

அஸ்மத் குயேஷ்வரம் தேவம் அஸமத் சத்ரு விநாஸவனம்
அஸ்மதிஷ்டப் பிரதாதாரம் சாஸ்தாரம் பிரணமாம் யஹம்

பக்த ருக்ஷாகரம் தேவம் ஆஸ்ரிதாரி விநாசம்
பத்தா பீஷ்ட ப்ரதா தாரம் சாஸ்தாரம் ப்ரணமாம் யஹம்

பாண்ட்யேச வம்ச தியகம் கேரளே கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம் தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம் யஹம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடி சேர்ந்த அமரர்

# சிவஸ்ரீ ச. பால வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழமணித்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் வலிகாமம் கிழக்கு பெருநிலத்தில் தெய்வ மணங்கமழும் ஊரெழு என்னும் தெய்வீகப்பதி அமைந்துள்ளது. இப்பதி இராமபிரான் மண்ணில் அவதரித்த காலத்தில் தாகம் தீர்க்க தொட்டு வைத்த வற்றாத பொக்கணை என்னும் நீரூற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் பூர்வீகப்பயனால் இம்மண்ணில் அந்தணப் பெருந்தகையர்கள் அன்று தொட்டு இன்று வரை வாழையடி வாழையாக வாழ்ந்து வேதாகமங்களையும் சைவத்தையும் வளர்த்து வருவது கண்கூடு.

இதன் அடிப்படையில் வாழ்ந்தவரும் ஊரெழு மக்களால் சின்னக்குருக்கள் என அன்பாக அழைக்கப்பட்டவருமான பாலசுந்தரக் குருக்களுக்கும் மீனாம்பிகை அம்மாவுக்கும் தெய்வீகப் புதல்வனாக சிவஸ்ரீ பால வைத்தியநாத சிவாச்சாரியார் 20-07-1927 இல் அவதரித்தார். இவர் இளமைப்பருவத்தில் தெய்வ பக்தியும் துரியாட்டமும் உடையவராக விளங்கினார். இவர் உடன் பிறப்புகளாக அக்கா இராஜேஸ்வரி அம்மாவும் தம்பி பஞ்சாட்சரக் குருக்களும் திகழ்ந்தனர்.

இவர் இளம் பிராயம் தொட்டு அக்காலத்தில் இருந்த உயர் வகுப்புவரை ஊரெழு கணேச வித்தியாசாலையில் கல்வி கற்று தேர்ச்சி பெற்றார். இவர் கல்வி கற்ற காலத்தில். அப்பாடசாலையின் நவராத்திரி பூஜைகளையும் நடத்திவைத்துள்ளார். பாடசாலைப் படிப்பை முடித்ததும் இந்தியாவிலிருந்து வருகை தந்த சிதம்பர சாஸ்திரியாரிடம் வேதம், ஆகமம், ஜோதிடம் ஆகியவற்றை முறையே கற்று வித்தகரானார். இளமைப் பருவத்தில் இவர் தந்தையாருடன் ஆலய கிரியைகளில் ஈடுபட்டுவரலானார்.

இவரது பெற்றோர்கள் சமயாசர்ர முறைப்படி 1955ம் ஆண்டு சித்திரை 23ம் திகதி கண்டி பத்மநாத ஐயர் பாகீரதி (அம்மாலு அம்மா) தம்பதிகளின் புதல்வி பவானி அம்மாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து வைத்தனர். இல்லற வாழ்வில் சந்தானப் பேறாக வாகீஸ்வரி, தியாகராஜக் குருக்கள், சுந்தரேஸ்வரி, ஸ்ரீமசுந்தர குருக்கள், பாலசுந்தரக் குருக்கள், சபேஸ்வர சர்மா ஆகியோரைப் பெற்றெடுத்து இன்புற்றிருந்தார். ஊரெழுவில் பெரிய குருக்கள் என சைவ உலகமே போற்றிய சிவஸ்ரீ ச. சோமசுந்தரக் குருக்களான பெரிய தந்தையிடம் முறைப்படி ஆசாரி அபிஷேகம் பெற்று குருக்களானார். முதல் தடவையாக வேலணை முடிப்பிள்ளையார் கோவிலில் கொடியேற்றி மகோற்சவ குருவானார்.

இவரது அறிவையும் ஆற்றலையும் அறிந்த தீவக மக்கள் அங்குள்ள பல ஆலயங்களில் இவருக்கு குருத்துவம் கொடுத்து மகோற்சவ குருவாக்கினர். இவற்றுள் அனலைதீவு, நெடுந்தீவு, வேலணை, மண்டதீவு, மட்டுவில் கண்ணகை அம்மன் பரம்பரை குருத்துவத்தைப் பெற்றுள்ளது. ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பரம்பரைக் குருத்துவத்தைப்பெற்ற வைத்தியநாத சிவாச்சாரியார் இறைவனடி சேரும்வரை கிரியைகளை காலம் தவறாது நிகழ்த்தி வந்த பெருமைக்குரியவர். அது மட்டுமல்லாது அடிச்சுவட்டில் தமக்குப் பின்னாக குருத்துவம் மூத்த புதல்வன் சிவஸ்ரீ வை. தியாகராஜக் குருக்கள் என எழுதப்பட்டிருப்பது சிறப்பு அம்சமாகும். சிவாச்சாரியாரது விரிவான விரைவான சேவைகளை நன்கு அறிந்த அமரத்துவம் அடைந்த அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள் அவரை தமது சிஷ்யனாக்கி பல ஆலயங்களில் கிரியைகளை நடாத்துவித்துள்ளார்.

முதுமைப் பருவம் அடைவதற்கு முன்பாக பிள்ளைகளை பண்பான முறையில் வளர்த்து கல்வி கற்பித்து ஐந்து பேருக்கும் திருமணமும் செய்து வைத்துள்ளார். இளைய மகனாருக்கு தமது செயல்பாட்டு கிரியை முறைகளைக் கற்பித்த வண்ணம் இருந்தார். சங்கீத கதாப்பிரசங்க வித்துவான் வை. நித்தியானந்தசர்மா, அளவெட்டி பெருமாள் கடவை பிரம்மஸ்ரீ ச. வைத்தீஸ்வர சர்மா, சுசிலாதேவி, சிவலோஜினி, சுகிர்தாம்பிகை ஆகியோர்களை மருமக்களாகவும், பிரதாயினி, நித்தியாயினி, பாரத்வாஜன், ஸ்ரீவத்ஸன், சிந்துஜன், நிவேதனன், சுபாஷினி, சண்முகப்பிரியா, மதுராமன் என்பவர்களை பேரப்பிள்ளைகளாகவும், சோமசுந்தரசர்மா, மீனாம்பிகை, சோமகலாதரசர்மா ஆகியோர்களை பெறாமக்களாகவும் கொண்டு மகிழ்வுற்றிருந்தார். இவரின் நெருங்கிய உறவினராக மைத்துனர் கோப்பாய் பரமசாமிக் குருக்கள் அவர்களும் பெரிய தகப்பனாரின் இளையமகன் சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக்குருக்கள் இவரின் நற்கருமங்களுக்கு இறுதிவரை நின்று நவியவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாச்சாரியார் அவர்கள் தமது 43வது வருட குருத்துவ சேவையில் ஏறக்குறைய 700க்கு மேற்பட்ட மகோற்சவங்களை யும் 500க்கு மேற்பட்ட கும்பாபிஷேகங்களையும் செய்து வைத்த பெருமைக்குரியவர். இவற்றுள் கடந்த 5-7-1995ல் சுவிஸ்நாடு சென்று சுவிஸ் சிவசுப்பிரமணியசுவாமி கோயிலில் கும்பாபி ஷேகம் நடாத்தியதும் அடங்கும். இவரது சேவையை வியந்து பல இந்து ஆலயங்களும், அமைப்புகளும் சிவபூஜாதுரந்தரர், சிவாகம வித்யா பூஷணம், வேதாகமமாமணி, சிவபூஜாநிதி, சிவாகமதிலகம், கிரியாரத்தினம், சிவாகமகிரியா சூடாமணி முதலான கௌரவ விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள். இலங்கை இந்து சமய கலாச்சார திணைக்களம் வேதாகம மாமணி விருதை வழங்கியிருந்தது.

வைத்தியநாத சிவாச்சாரியார் தமது வாழ்நாளில் ஒரு நாளேனும் தவறாது கடைப்பிடித்த நடைமுறையில் தேக சுத்தியும், சிவபூஜையும் முக்கியவிடத்தை வகிக்கின்றது. நெடுந் தூரப் பயணத்தில் புகையிரதத்தில் இருந்த வேளையில் கூட சிவபூஜை நடாத்தியமையும், இறக்கும் நேரம்வரை நீராடி வந்தமையும் சான்று பகருகின்றது. அணுகிவரும் மக்களுடன் 'அப்பசரிதான், தெய்வகாரியம் நடக்கட்டும்... சரியாய்போச்சு' என்ற வார்த்தைகள் அனைத்தும் நிறைந்த அமுதவாக்குகளே யாகும். தம்மை நாடி வருவோர்க்கு அன்பு செலுத்தி அன்னம் அளித்து அருள்பெற வழியனுப்பும் பழக்கம் அனைவர் உள்ளங் களையும் கொள்ளைகொண்டிட வைக்கிறது.

சிவபூஜையின் பலன் சிவகதியே என்ற உண்மையினை உலகறிய வைக்குமளவிற்கு சிவன்டி சேரும்நாள் நெருங்குவதை தம்முன்னே அறிந்து தமது பாரியார் சகிதம் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தலத்தில் குருக்களாகக் கடமை புரியும் சிவஸ்ரீ வை. பாலசுந்தரக் குருக்களிடம் சென்று கூடி யிருந்து பின்னர் லண்டன் முருகன் ஆலயத்தில் குருக்களாகச் சேவையாற்றும் சிவஸ்ரீ வை. ஸ்ரீமசுந்தரகுருக்களுடன் குதூ கலமாக இந்தியா சென்று பிரபல்யமான ஆலயங்களுக்கு யாத் திரை செய்து, காசி சென்று விஸ்வநாதப் பெருமானைத் தரிசித்து கடன்களை நிறைவேற்றினார். மனநிறைவுடன் நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி தமதில்லம் அடைந்து சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினை நாகபூசணி அம்பாள் குடமுழுக்கில் பங்கேற்றுச் சிறப் பித்து பின் அனலைதீவு சங்கரநாத மகா கணபதிப் பிள்ளையார் தலமடைந்து மகோற்சவத்தை மிகவும் திறம்பட நடாத்திவிட்டு மீண்டும் வீடுதிரும்பி 21 பிராமணர்களுக்கு முறைப்படி தான மளித்து அவர்களுடன் கூடிக் குலாவியிருந்தார்.

புளியந்தீவு நாகேஸ்வரன் ஆலய கும்பாபிஷேக ஏற்பாடு களைச் செய்துகொண்டிருந்த வேளை 22 - 04 - 98 ம் திகதி புதன்கிழமை தனது திருமண நாளன்று அபர பக்க தசமித் திதியில் அதிகாலை 5 மணி அளவில் எழுந்திருந்து துணைவியார் பிள்ளைகள் முன்பாகக் காத்திருக்க "என்ன செய்வோம்" "என்ன செய்வோம்" என இருதடவை கூறி இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் திப்போமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெழு

அந்தண சிரேஷ்டரும் பிரபல சிவாச்சாரியாருமான

## பிரம்மஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்கள் அவர்களின்

**சிவபதப் பேற்றைக் குறித்து அன்னாரது ஆத்மா**
சாந்தியடைய வேண்டிப் பிரார்த்தித்துப் பாடிய

# பிரார்த்தனைப் பாடல்கள்

1. வேதமும் ஆகமமும் சைவ நெறி
வியனுலகில் வளர்த்திட்ட அந்தணனன்
பூதலத்தில் பாலசுந்தரக்கு ருக்கள்
பூவையொடு ஈன்றெடுத்த ஞானவள்ளல்
மாதவஞ்சேர் ஊரெழுவூர் செய்த வத்தால்
மாண்புமிகு சிவாச்சாரி யாராய் வந்த
பேர்தமுறு பேரறிஞன் வைத்திய நாதப்
பூசுரரின் நல்லாத்மா பெறுக சாந்தி

2. வடமொழியும் தென்மொழியும் கற்ற நூலோன்
வாக்கினியன் செயலினியன் மனமி னியன்
கடலனைய வேதநெறி ஆய்ந்து தேர்ந்தோன்
கவின்வேத சிவாகமத்தின் கிரியா பாகம்
தடையெதுவு மின்றிவெகு சரள மாக
திருக்கோயில் மஹோத் ஸவங்கள் பல
திடமனத்தோ டநுதினமும் சிவனின் பூஜை
திகழன்வைத்ய நாதாத்மா பெறுக சாந்தி

3. இலங்கையிலே எண்ணற்ற திருக்கோ யில்கள்
இலங்கிடவே கும்பாபி ஷேகம் செய்து
துலங்கிடவே மஹோத்ஸவங்கள் ஆக்கி வைத்த
தூயதமிழ் சைவநெறி தழைக்கச் செய்து
மலர்ந்தமலர் இறையவனின் பதத்தில் சூட்டி
மனத்தினிலே பக்தியொடு பூஜை செய்த
அலர்ந்தஇதழ் புன்னகையும் பூக்கும் குரு
அழகு வைத்ய நாதாத்மாபெறுக சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பரத்வாஜ கோத்திரத்தில் உதித்த நூலோன்
பண்பாடு பண்புகள் நிறைந்த அண்ணல்
சரத்சந்த்ர பிம்பமுகக் கட்ட முகன்
சாந்தமே உருவான சற்குணவர்
புரத்தழகும் பதியான ஊரெழு வின்
பூரணனாம் வீரகத்தி விநாயகன்
சிரத்தினிலே கரங்கூப்பி வணங்கும் பக்தன்
வைத்யநாத ஆத்மாதம் பெறுக சாந்தி

5. கடல்கடந்து பற்பலதே சங்க ளிலே
கற்கோவில் பல சமைத்த ஊர்களிலே
இடம்அறிந்து சிவாகம விதிமு றையாய்
இனியகும் பாபிஷேகம் நடாத்தி வைத்தார்
புடம்போட்ட பொன்போல தேசு மேனி
புனிதவே தமுமோதும் புண்ய நெஞ்சன்
கடந்தனனே இவ்வுலக வாழ்வை விட்டு
கலாவைத்ய நாதாத்மா பெறுக சாந்தி

6. ஆழ்ந்தநற் சமஸ்கிருத ஞானம் தோற்றும்
அன்பினொடு அடக்கமும் அமைதி தோற்றும்
சூழ்இதயம் சுந்தரமாம் பக்தி செய்து
சுகுணமுகப் பிரகாசம் ஒளியும் தோன்றும்
வாழ்நாளில் சிவபூஜை மறந் தறியான்
வளமான ஆசாரம் வளர்ந்து தோன்றும்
வேழமென வேதத்தின் நூலும் ஆய்ந்தோன்
வைத்யநா தாத்மா பெறுக சாந்தி

7. இந்தியநற் திருத்தலங்கள் யாவும் சென்று
இன்பமாய் யாத்திரைகள் நிறைவு செய்து
சுந்தமிகு தவச்காசி நகரும் சென்று
கங்கைதனில் நீராடி பூஜை செய்து
பந்தமிகு காசிவிஸ்வ நாத ரோடு
பார்வதியாம் விசாலாக்ஷி பாதம் போற்றும்
அந்தணனாம் வைத்தியநாத குருக்கள் ஆத்மா
ஆனந்த முத்திப்பேறு பெற்றே வாழி

8. நயினைவளர் நாகபூ ஷணிஅம் மைக்கு
நளினமிகு குடமுழுக்கு நீரு மாட்டி
அனலைவளர் ஐயனாரின் பாதம் போற்றி
அழகொழுக மஹோத்ஸவங்கள் செய்து வைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலைமலை இறைவனான கபாலீச் வரன்
கழலடியே பூஜிக்கும் பக்த னான
எளிமைமிகும் பெருங்குருக்க ளான ஐயன்
எழில்வைத்ய நாதாத்மா பெறுக சாந்தி

9. சிவாகம வித்யாபூ ஷணமு மானார்
சிவபூஜா துரந்தரர் விருதும் பெற்றார்
சிவாகம மாமணி சிறிலங் காவின்
சிறந்திடும் கௌரவப் பட்டம் பெற்றார்
சிவாகம கிரியாசூ டாமணி யாம்
சிவபூஜா நிதிபோன்ற பலப ட்டங்கள்
சிவஸ்ரீவைத் தியநாதக் குருக்கள் பெற்றார்
சிவபதத்தில் நல்லாத்மா பெறுக சாந்தி

10. தர்மபத் தினிபவானி அம்மா ளோடு
தனையரும் நின்பிரிவால் துடிக்கின் றாரே
மர்மமாய் நின்ஆவி மறைய லாமோ
மாபெரிய இழப்பன்றோ மாநி லத்தில்
சர்வசா தகராப் போத கஞ்செய்
சாமுத்திரிகா லக்ஷணத்துக் குருக்கள் நீயே
தர்மமாய் இவ்வுலகை விட்டுச் சென்றாய்
தாடலைப் படுதல் செய்தாய் பெறுக சாந்தி.

ஆக்கம்: கவிமாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவர் தங்கை.

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து தவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லாநிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வாவென்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

## திருவாசகம்

வான நாடரும் அறியொணாத நீ
மறையில் ஈறுமுன் தொடரொணாத நீ
ஏனை நாடரும் தெரியொணாத நீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடுவித்தவா
உருகி நான் உனைப் பருகி வைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத்து உடைய விச்சையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இவ் அரும் பிறவிப்பௌவ நீர் நீர்த்தும் ஏழையேற்கு
என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார் துணை என்றால்? அஞ்சல்
என்று அருள் செய்வான் கோயில்
கைவரும் பழமை குழைந்த செஞ்சாலிக் கடைசியர்
களைதரு நீலம்
செய்வரம்பும் அரும்பும் பெரும்பற்றப் புலியூர் திருவளா.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகின்
ஊரும் உலகுங் கழற உழறி உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## திருப்புகழ்

பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதி குரு வாக்கியப் பொருளாலே
உனது பதகாட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவனேத்து முத்தமி ழோனே
குமர குரு கார்த்திகைப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரச செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவ இதய அஞ்சலி

இந்திய தலயாத்திரை காசி ஷேத்திரம் வரை சென்று சுவாமி தரிசனம் செய்து கொழும்பு திரும்பியதும் என்னுடன் பல விடயங்களையும் கதைத்துவிட்டு எல்லாம் நிறைவாக உள்ளது சந்தோஷம் நான் போய் வருகின்றேன் இனி யார் யாரோ என்று சொல்லிவிட்டுச் சென்று ஒரு மாதம் கூட ஆகவில்லை. மகன் பாலாகுருக்கள் புதன் காலை வந்து அப்பா இறந்து விட்டார் என்று சொன்ன போது நம்ப முடியவில்லை. ஊரெழு சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்கள் பண்பான தலைசிறந்த குருக்கள். அண்மைக்காலத்தில் நாம் இருவரும் சுவிஸ்சர்லாந்து சென்று கும்பாபிஷேகம் செய்து திரும்பினோம். அவர் எனது சுகத்தையே கேட்டுக்கொண்டு இருப்பார். கிரியா நேரங்களில் பக்தியுடன் கிரிகைகளைச் செய்வார். யாரையும் மனம் நோகப் பேசமாட்டார். இலங்கையில் அனலைதீவு, மண்டதீவு, வேலணை யாழ்ப்பாணம் போன்ற அநேக இடங்களில் ஆலயங்கள் அவரால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளன. அவ்வூர் மக்கள், மற்றும் ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் மக்கள் அவரிடம் குருபக்தி அதிகம் கொண்டவர்கள். சிவஸ்ரீ. வைத்தியநாதக் குருக்கள் சிவபதம் அடைந்தமை இலங்கை சைவ உலகிற்கு ஒரு பேரிழப் பாகும். அவரது துணைவியார், பிள்ளைகள் எல்லோரும் எனது குடும்பத்துடன் பற்றுதல் கொண்டவர்கள். நோயுற்று பாயில் படுத்து வருத்தப்படாது இறந்தன்றும் தனது சிவபூஜை கடமைகளை முடித்து சிவபதம் சென்றமை அவர் செய்த சிவபூஜைப் பலன் தாம்.

அன்னார் பிரிவால் துயறுரும் மனைவி, மக்கள் யாவருக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னார் ஆத்மா சாந்தியடைய நானும் பொன்னம்பல வாணேசனைப் பிரார்த்திக்கின்றேன்,

**சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக்குருக்கள்**
**பிரதம சிவாச்சாரியார்.**
ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் அவர்கள் திடீரென சிவ பதமடைந்ததைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னார் சிறந்த கல்விமானும் கிரியைகளை மிக ஒழுங்காகவும் அவதான மாகவும் செய்யக்கூடியவர். நான் அவருடன் சில கும்பாபிஷேகங் களில் இணைந்து சாதகாச்சாரியராக இருந்துள்ளேன். கிரியை களில் லோபமில்லாமலும் தெளிவாகவும் செய்யக்கூடிய ஆற்ற லுடையவர். அவருக்கு நிகர் அவரேதான். வேறொருவரும் நிகரில்லை.

அவர் அறிந்தோ அறியாமலோ அவருடைய புண்ணிய வசத் தால் அவருடைய கடைசிக்காலத்தில் காசிமுதலான க்ஷேத்தி ரங்களுக்குச் சென்று தனது பெற்றோர் முன்னோருக்கு உரிய பிதுர்க் கடன்களை எல்லாம் காசியில் செய்துவிட்டு அண்மை யில்தான் திரும்பிவந்திருந்தார். ஊரெழு மற்றும் அனலைதீவு முதலிய இடங்களிலெல்லாம் வம்சப் புரோகிதராக இருந்து ஆசி வழங்கியவர். இங்குவந்து நயினை சென்று அம்பாளுடைய கும்பாபிஷேகத்தில் பங்குபற்றிவிட்டு வந்து, அமரராவதற்கு இரு நாட்கள்முன் இங்கு வந்து எங்களுக்கெல்லாம் காசிப் பிர சாதம் வழங்கி, என் குடும்பத்தினருக்கெல்லாம் ஆசி வழங்கி விட்டு சந்தோஷமாக கதைத்துக்கொண்டிருந்து விட்டுத் திரும் பினார். மறுநாள் அவர் அமரராகிவிட்டார் என்று கேள்விப் பட்டவுடன் அதிர்ச்சியடைந்தோம். அவருடைய குடும்பத்தவ ருக்கு இவருடைய மறைவால் ஏற்பட்ட பேரிழப்பு சொல்ல முடியாதது. இறைவன்தான் இவர்களுக்கெல்லாம் மன ஆறு தலை அளிக்கவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின் றோம். அவருடைய ஆத்மா அம்பாளின் திருப்பாதத்தில் சாந்தி அடைவதாக!

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு''

இங்ஙனம்

நியாயசிரோமணி

25 - 04 - 98 — கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் மலர்களால்

# சமர்ப்பணம்

ஊரெழு

## சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் வைத்தியநாதக் குருக்கள்

*(வேதாகம வித்தகர் - பிரதிஷ்டா திலகம் - ஆகமவித்தகர்)*

அவர்களின் திடீர்மறைவு சைவ உலகத்திற்கும் அந்தணப் பெருமக்களுக்கும் பேரிழப்பாகும். இவர் குரு சிஷ்ய பரம்பரையாக வாழ்ந்து காட்டியவர். இவர் தமது குருத்துவப்பணியை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மிகச்சிறப்பாகவும், பக்தியாகவும் கடமையாற்றிய உத்தமர் அவர்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக்கொள்வதுடன் இவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

யாழ். இந்துமத குருமார் ஒன்றியம்

*74, பிறவுண் வீதி,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்
குருபர்தம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்:
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள்
( குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர் )

ஆதீன முதல்வர்:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள்
( இரண்டாவது குருமஹா சந்நிதானம் )

# இரங்கற் செய்தி

திருமதி வைத்தியநாத சிவாச்சாரியார் பிள்ளைகள் அனைவருக்கும் சிவஸ்ரீ வைத்தியநாத சிவாச்சாரியாருடைய மறைவு எம்மை பெரும் மனத்துயரில் ஆழ்த்தியுள்ளது. பிராம்மண சமுதாயத்துக்கு மட்டுமன்றி சைவப் பெருமக்கள் அனைவருக்கும் பெரும் துயரமாகும். ஆறு சீலங்களையும் ஒழுங்காகக்கொண்டு சிவபூஜா துரந்தரராக ஆசார ஒழுக்கத்துடன் வாழ்ந்த சிவாச்சாரியார் அவர்கள் அறிவும், அடக்கமும், பண்பும் கொண்ட ஒரு சிவத்தொண்டாளன் ஆவார். இந்த நாட்டில் உள்ள பல பெருமைவாய்ந்த ஆலயங்களில் எல்லாம் கும்பாபிஷேகங்கள் திருவிழாக்கள் பலவற்றை நடாத்தி, இவ் ஊர் மக்களுக்கும் பெரும் பெருமையைத் தேடித்தந்தவராவார் குருக்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு இறைவனின் ஆசிகள் கிடைக்கவும் பிரம்மஸ்ரீ வைத்தியநாத சிவாச்சாரியாருடைய ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பரம்பரைக் குருக்கள் வம்சத்தில் வத்துதித்து அதன் பிரதம குருக்களாக மிளிர்ந்தவர் அமரர் சிவாகமவித்யாபூஷணம், கிரியாரத்தினம் சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாதக்குருக்கள் ஊரெழு என்ற பழம் பெருமைவாய்ந்த ஊருக்கு பெயர்சேர்த்த செம்மல்களில் ஒருவர்.

சைவத் தமிழ் உலகத்தில் சிவாச்சாரியர்கள் வரிசையில் கல்வி ஞானம், கேள்வி ஞானம் நிரம்பப்பெற்று வேதாகம வித்தகராக மிளிர்ந்ததோடு கிரியைகள் விடயத்தில் தனி முத்திரைபதித்து வாழ்தம் வாக்கும் பிசகின்றி உலகம் வியக்க வாழ்ந்துகாட்டிய சிவநெறிச் செல்வர். சென்றமாதம்தான் இந்தியர்வுக்கு யாத்திரை சென்று காசியாத்திரை எல்லாம் முடித்து சுகபலத்தோடு திரும்பினார். காலனுக்குப் பொறுக்கவில்லைப் போலும், தன்னிடம் கூட்டிச் சென்றுவிட்டார்.

இத்தகைய பெருமைக்குரிய, வணக்கத்துக்குரிய அனுபூதிமானைப் பிரதம குருக்களாகப் பெற்ற பெருமை எமது ஆலயத்துக்கே உரியதாகும். எங்கள் ஆலயத்திற்கு 16 - 09 - 1985 ல் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இவருடைய தலைமையில் நடைபெற்றது. இவ்வாண்டில் மீண்டும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற அமரர் அவர்களே வழமைபோல் பிரதம ஆச்சாரியாராக இருந்து இதனை நிறைவேற்றவேண்டுமென எமது நிர்வாகசபை எடுத்த தீர்மானத்தினை, விதி விளையாடிவிட்டதை எண்ணும்போது நீங்காத வேதனையாக இருக்கின்றது.

பிராமண பரம்பரையின் தோற்றுவாய்களில் ஒன்றான ஊரெழுப் பதியும் அமரரின் பரம்பரையும் இக்குறைபாட்டினை - இடைவெளியை நிரப்பும் என்பது எமது நம்பிக்கையாகும்.

அன்னாரது இழப்பு எமது ஆலயத்தைப் பொறுத்தவரை ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அவர் குடும்பத்தாருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**க. கனகசபாபதி**
தலைவர்
ஊரெழு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நியந்த்ரீ - Niyantrie

## அஞ்சலி

சிவன் கோவில்,
நல்லூர் 25-04-98

நித்ய கர்மானுஷ்டராக வாழ்ந்து பல ஆலயங்களின் நைமித்யக் கிரியைகளை சிறப்புற நடாத்தி வந்தவர் அமரர் பால வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்களாவர். பெரிய குருக்கள் என்றால் அன்னாரின் சகோதரர் ஊரெழு சோமசுந்தரக் குருக்கள் அவர்களையே குறிக்கும். அவரோடும் அவரின் பின் அவர் போலும் நீண்டு நிமிர்ந்த சரீரத்துடன் எந்நேரமும் வீபூதியை உத்தூளனமாகவோ திரிபுண்டரமாகவோ தரித்த தோற்றத்துடன் காட்சியளிப்பார். சிறந்த சிவபூஜா துரந்தரராக விளங்கியவர் சிவஸ்ரீ வைத்தியநாத சிவாச்சாரியார். அன்னார் ஆலயங்களில் கிரியைகளை ஆற்றும்போது அகலக்கரையுடனான பஞ்சகச்சத்துடனும். திருநீறும் சந்தணமும் நிறைந்த மேனியுடனும், கௌரிசங்கத்துடனும் சிவாச்சார்ய கோலத்துடன் நிற்கும் காட்சி எவரது மனத்தையும் கவரத் தவறுவதில்லை. இன்றும் அவரது கோலம் மனக்கண் முன் நிற்கின்றது. அவர் செல்கின்ற ஆலயங்களில் எல்லாம் அதிகம் பேசாது சிறந்த சாதனையாளனாக தனது பூசைகளில் மட்டும் கவனம் செலுத்தி அனைவரதும் மதிப்பைப் பெற்றவர்.

வைத்தியநாத சிவாச்சாரியர் அவர்கள் ஆசாரத்துடனும் ஒழுக்கத்துடனும் முறையாக வளர்ந்து நிறைவாகக் கிளைபரப்பி உறுதியாக விழுதுகள் ஊன்றி வாழ்ந்த ஒரு ஆலமரம் போன்றவர். இன்று அடிமரம் அற்றுப்போனாலும் உறுதியான விழுதுகளாய் விளங்கும் அவர்தம் மக்கள் அறிவும், ஆற்றலும், பண்பும் பணிவும் உள்ளோராய் அந்த ஆலமரம் உள்ளது உள்ளவாறே பசுமையாய் விளங்க வைப்பர் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

அன்னார் நைமித்யக் கிரியைகள் ஆற்றிவந்த ஆலயங்களில் எவ்வித குறையும் இன்றி எல்லாம் சீராக நடைபெறச்செய்ய வல்லவராய் அவர்கள் விளங்குவர் என்பது யாவர்க்கும் அமைதி தருவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்துணை நித்திய கர்மானுஷ்டராக இருந்தபோதும் காசிக்ஷேத்திரம் சென்று அங்கு கங்கை நீராட விரும்பி அண்மையில்தான் முறைப்படி காசியாத்திரை சென்று வந்தார்.

அனலைதீவு தெற்கு புளியந்தீவில் கோவில்கொண்டு நாக ராஜேஸ்வரி சமேத நாகேஸ்வரன் என திருநாமம் கொள்ளவுள்ள சிவன் ஆலயத்தின் கும்பாபிஷேகத்திற்கு நாட்குறித்தவர் அமரர் வைத்தியநாத சிவாச்சாரியர் அவர்கள்.

தனது மனித வாழ்க்கைப் படிகளை முறையாகவும் ஒழுங்காகவும் கடந்த வேளையில் தமக்குரிய நேரம் கண்டு ஆரவாரம் இன்றி அவனது அடி சேர்ந்தார் போலும். அன்னார் ஆடல் வல்லான் அடியிருந்து எமக்கெல்லாம் ஆசி தந்தருள வேண்டும் என எம்பெருமானை இறைஞ்சுகிறோம்.

**ந. சதாசிவஐயர்**

செயலர் நியந்த்ரீ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆத்மசாந்தி அஞ்சலி

ஆத்ம பூஜையின் அணிகலமாக ஆகமக் கிரியையின் அருஞ்சிகரமாக அந்தணர் குலத்தின் முடிமணியாக விளங்கிய ஊரெழுப் பெரியார் சிவஸ்ரீ பா. வைத்தியநாத சிவாச்சாரியர் அவர்களின் தேகவியோக சிவபோக பிரார்த்தி அடைந்த ஆத்மா அரனடியில் அமைதியுறப் பிரார்த்தித்து அவரின் பிரிவால் துயருறும் அனைவர்க்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

பிராமண இளைஞர்
சமாஜம்
25-04-98 உரும்பிராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரத்துவ அஞ்சலி

தன் அறிவாலும், ஆசாரத்தாலும், அனுட்டானத்தாலும், குலத்திற்கும், ஊருக்கும் உலகளாவிய பெருமை சேர்த்து வாழ்ந்து 22 - 04 - 1998 இல் ஆடல்வல்லான் அடியிணைக்கீழ் அமரத்துவமுற்ற

**சிவாகம வித்தியா பூஷணம்,**
**வேதாகம மாமணி, சிவபூஜாநிதி, சிவாகம திலகம்,**
**சிவபூஜா துரந்தரர், கிரியாரத்தினம்,**
**சிவாகம கிரியா சூடாமணி**

ஊரெழு

**சிவஸ்ரீ ச. பால வைத்தியநாத சிவாச்சாரியார்**

அவர்கள் திருவடிக்கு அஞ்சலிகள்.

சைவாலய முன்னேற்றக் கழகம்,
கலைவாணி சனசமூக நிலையம்,
ஊரெழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவ ஆத்ம அஞ்சலி

எமது ஆலயத்தின் சிவாச்சாரிய பாரம்பரியத்தில் நீண்ட காலமாக நித்திய, நைமித்திய கைங்கரியங்களில் பிரதம சிவாச்சாரியாராக விளங்கி எமக்கு ஆசியும் அருளும் வழங்கிய குருக்கள் ஐயா ஊரெழு

சிவஸ்ரீ ச. பால வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்தோம். இவ் வருடம் மகோற்சவம் பற்றிச் சிந்திக்கின்ற வேளையில் மறைவுச் செய்தி கிடைத்தது.

அவர்தம் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, பெரிய புலத்தானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து அமரத்துவ ஆத்ம அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பரிபாலனசபை

**மகா கணபதிப் பிள்ளையார்**

**(முடிப்பிள்ளையார்) ஆலயம்**

வேலணை மேற்கு பெரியபுலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனடி சேர்ந்த

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய

பிரதமகுரு சிவாகம கிரியாரத்தினம்

சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார்

அவர்களின்

# கண்ணீர் அஞ்சலி

சைவ உலகமே போற்றும் அந்தணப்பெருந்தகை சிவாகம கிரியாரத்தினம் சிவஸ்ரீ பா. வைத்தியநாத சிவாச்சாரியார் சிவனடி சேர்ந்து விட்டார் என்ற செய்தி கேட்டு ஊரெழு - சக்தி புரம் சிவ பூரணி முத்தமிழ் மன்றம் ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றது.

மறைந்த பெருமகனாரின் தெய்வீகப்பணி சமய குரவர்களின் பணிகளுடன் பின்னிப்பிணைந்துள்ளது. இலங்கையிலுள்ள பல இந்து ஆலயங்களில் மட்டுமல்லாது கடல் கடந்து கூட வெளி நாடு சென்றும் இந்து ஆலய கிரியைகளை சிறப்புற நடாத்தி ஊரெழுவிற்குப் பெருமை தேடிய வித்தகர் வைத்தியநாதரே ஆவர்.

வீரகத்தி விநாயகர் தோற்றமும், விரிவான விரைவான கிரி யைகளும், பண்பான வார்த்தைகளால் பணிவாக்கும் பரமன் படைப்பும், பொறுமையுடன் பெருமைதர ஏற்றிவைக்கும் கொடி யேற்றமும் திருவிழாவும், பெரும் சாந்தியும் என்றுதான் இனி காண்போமோ?

கடைவழிக்காகவா கதிர்காமம் முதல் காசி வரை தல யாத்திரை செய்துள்ளீர்? அதன் பலனையும் பெற்றுள்ளீர்? என்றும் தங்கள் அறவழி மக்கள் உள்ளங்களில் நீங்காத நினை வலைகளாகுமே! 'அப்ப சரி தான்' என்ற தங்கள் நாவில் எழும் தார்மீக மந்திரம் எல்லோரின் உள்ளக் குறைகளை என்றுமே நீக்கும் திருமந்திரமாக விளங்கட்டுமே! மீளாத்துயரில் உறங்கும் அண்ணனே! நின்பாதக்கமலத்தை நனைக்கும் மன்றத்து கண்ணீர் அஞ்சலி.

அன்னாரின் திடீர் மறைவில் துயருறும் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபத்தை மன்றம் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி! சாந்தி!

இவ்வண்ணம்

சிவபூரணி முத்தமிழ் மன்றம்,

சக்திபுரம், ஊரெழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

ஆன்மீகத்தின் செழிப்பிற்தான் உலகம் உய்வடைய ஏதுவர்கும். ஆன்மீகத்தின் உயிர்நாடிகளாக இருப்போர் அந்தணர்களும் அவர்களைச் சார்ந்த சைவர்களுமாவர். அந்தணர்களது மூலவேர் வர்ணாச்சிர தர்மங்களாகும். வர்ணாச்சிர தர்ம வாழ்வில் ஆஸ்திக மக்களது ஒருமைப்பாடும் உலக சகோதரத்துவ உணர்வும் மேலோங்கும். அப்போதுதான் தர்மவுலகைக் காணமுடியும்.

மனச்சாந்தி வேண்டுமானால் அதனைப்பெற இந்து சமயத்தில்தான் தரவுகள் உண்டு. இந்து சமயம் எவ்வளவு காலமிருக்கிறதோ அவ்வளவு காலம்வரை தான் தர்மங்களும் நீடிக்கும், தவமும் நிலைக்கும். எனவே தவமும் தர்மமும் பெருகி, இந்து சமயம் மேல் நிலைநின்று ஆன்மீகத்தினூடாக உலக ஒற்றுமையும், ஒருமைப்பாடும் பெறவேண்டுமாயின் வர்ணாச்சிரம தர்மங்கள் தான் துணைதரும் என்பது உண்மை.

ஊரெழு பா வைத்தியநாத சிவாச்சாரியார் ஓர் சிறந்தஞானி, வர்ணாச்சிர தர்மங்களை இறுக்கமாகக் கடைப்பிடித்து ஜகத்தின் மேன்மைக்காக அரும் பெரும் கர்மாக்களை இயற்றியவர். மிகுந்த பொறுமையோடும் அளவற்ற இரக்க சிந்தனைகளோடும், உயரிய தெய்வீக நிலையில் நின்று அப்பெரியவர் ஆற்றிய கும்பாபிஷேகங்கள் மகோற்சவங்கள், மற்றும் அனைத்துத் துறை சார்ந்த கர்மாக்கள் யாவும் பாரிய பலன்களைத் தந்தும், சைவநீதி உலகெங்கும் வாழவும் துணைசெய்துள்ளன. இதனை ஈழம்வாழ்மக்கள் நன்கறிவர். ஊரெழு பெற்றிருந்ததோர் பெருஞ்செல்வம் வானுலகம்போய்ச் சேர்ந்துவிட்டது. உலகில் திருவோங்கவும், புண்ணியச் செயலோங்கவும், அன்பருள் திருவோங்கவும், செல்வமோங்கிச் செறிவோங்கவும். அறிவோங்கி நிறைவான இன்பம் திகழ்ந்தோங்கவும் தன்னையே ஆகுதியாக அர்ப்பணித்து வர்ணாச்சிரம தர்மங்களின் புனிதத்தையும் வெளிக்காட்டிய மகானை ஈழம்வாழ் சைவர்களும் இழந்து விட்டனர். அன்னாரது ஆத்ம சாந்திக்காக நாமனைவரும் பிரார்த்திப்போமாக.

சாந்திஹி - அஸ்து

மஹாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் அவர்களின் ஜேஷ்ட புத்திரன்

## வைத்தியநாதக் குருக்கள் அவர்களின்

## சிவபதப் பேறு குறித்து

# நினைவஞ்சலி பாமலர்

அந்தணர் குலத்துதித்த சிவாச்சாரிய திலகம் சிவஸ்ரீ சதாசிவக் குருக்கள். இவர் கோத்திரம் பாரத்துவாஜ கோத்திரமும் ஆபஸ்தம் பாரத்வ சூத்திரத்திலும் தோன்றிய திலகம் என்று சொன்னால் மிகையாகாது. இவர் வடமொழி, தென்மொழியிலும் ஜோதிடங்களிலும் மிகவும் தேர்ச்சிபெற்று வருங்காலங்களில் பல ஆலயங்களிலும் மஹோற்ஸவா, மஹாகும்பாபிஷேகங்கள் சிவாகம முறைப்படி நடாத்தி வருங்காலங்களில் அன்னாரின் தவப்பயனாக சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள், சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் தோன்றினார்கள். இவர்கள் கல்வியிலும் வடமொழி, தென்மொழி, ஜோதிடங்களிலும் மிகவும் சிறப்புற்று வருங்காலங்களில் உபநயனம் ஆசார்யாபிஷேகம் புரிந்து தந்தையின் உதவியுடன் மஹோத்ஸவம், மஹாகும்பாபிஷேகங்களில் பல இடங்களிலும் மிகவும் சிறப்புடனும், சிவாகம முறைப்படியும், சிரத்தையுடனும் பலர் போற்றும்படியும் நடாத்தி வருங்காலங்களில் தவப்பயனாக இராஜேஸ்வரியும், வைத்தியநாத சர்மாவும், பரமேஸ்வர சர்மாவும் தோன்றினார்கள். இவர்கள் தந்தையிடம் வடமொழியும் பாடசாலையில் தென்மொழியும் பயின்று வருங்காலத்தில் உபநயனம் (ஆசார்யாபிஷேகம்) செய்யப்பெற்றுப் பவானியம்மாளை விதிப்படி மாங்கல்யதாரணம் செய்தும் ஆசார்யாபிஷேகம் செய்யப்பெற்று தந்தையின் கடமைகளைச் சிறப்புமாக ஆலயங்களில் மஹோத்ஸவம், மஹாகும்பாபிஷேகம் முதலிய பல கிரியைகளை சிவாகம முறைப்படியும் சிரத்தையுடனும் மக்கள் போற்றும்படியாகவும் நடாத்தி வருங்காலத்தில் தம் புத்திரர்களை நல்ல நிலையில் வைத்தும் வருங்காலத்தில் இவர் தீர்த்த யாத்திரை செய்தும் நிலையில்லாத வாழ்வை வெறுத்து தான தருமங்களைத் தானே செய்து இறைவனடி சேர்ந்தார். இல்லற வாழ்வின்பத்தைவிட்டு பேரின்ப வாழ்வினை மதித்து ஆண்டு சித்திரை மாதம் இறைவன் திருவருளால் உத்தராயண புண்ணிய காலத்தில் சித்திரை மாத 22-ம் திகதி புதன்கிழமை கிருஷ்ண பக்ஷ தசமி திதியில் இறைவன் திருவடி சேர்ந்தார். பிறப்பெனும் பேதாமை நீங்கச் சிறப்பெனும் செம்பொருள் காண்பதறிவு.

நயினை நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான
விசேஷ குரு
**சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள்**
உத்தர கோவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ நலம் பரப்பிய சீலர்

ஈழத்தில் வாழும் சிவநெறியாளர்கள் முதன்மை தந்து வழிபடும் மூர்த்தி விநாயக மூர்த்தி. யாழ்ப்பாணத்திலுள்ள பிள்ளையார் கோயில்கள் பலவற்றுள்ளும் சீரும் பேரும் பெற்றுத் திகழும் பெருமை வாய்ந்தது ' ஊரெழு வீரகத்தி விநாயகர் திருக்கோயிலாகும்''. அருளொளி வீசும் இந்தத் தெய்வ நிலையத்தின் மேம்பாட்டுக்குக் காலாகவும் கருவியாகவும் மிளிர்ந்தவர் சிவத்திரு. வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்களாவர்.

கல்வி கேள்விகளிற் சிறந்து வேதாகம ஞானம் விளங்கப் பெற்றவராகிய குருக்களவர்கள். ஆசார சீலர்; சிவனை நொடியும் மறவாத சிந்தையர்; வேத நெறி தளைத்தோங்க வேண்டுமென விரும்பியவர்; மிகுசைவத் துறைவிளங்க அயராது பணி புரிந்தவர் அதனாலே ஊரெழு வாழ் சைவ மக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்றவர். அவ்வளவில் அமையாது வெளிநாட்டுத் தமிழர்களின் வேண்டுகோள்களை ஏற்றுப் பரந்த அளவிலே தமது பணிகளை விரித்துக்கொள்ளும் பண்பும், பக்குவமும், தாராள மனப்பான்மையும், சிவாகமப் பற்றும வாய்க்கப்பெற்றவர். அதனாலன்றோ, சைவத் தமிழகம் இவருக்குச் சிவாகம வித்தியா பூஷணம், வேதாகம மாமணி, சிவபூஜாநிதி சிவாகம திலகம், சிவபூஜாதுரந்தரர், கிரியா ரத்தினம், சிவாகம கிரியா சூடாமணி என்றெல்லாம் பட்டங்கள் பலவற்றைச் சூட்டிப் போற்றி மகிழ்ந்தது. குருக்களவர்கள் தம் தந்தையாராகிய சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்களின் அடிச் சுவட்டிலே வாழ்ந்து நலம்பரப்பியதோடமையாது, இளைய தலைமுறையைச் சேர்ந்த அந்தணர்களை வழி நடத்தி அறிவு புகட்டும் பணியிலும் ஈடுபட்டமை பெரிதும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

குருக்களவர்களின் மறைவு சைவத்தமிழ்ப் பேருலகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவா தம் ஆருயிர் இறவாத இன்ப அன்பாகிய நற்கதியை அடைவதாக என, நீர்வேலியிற் கோயில்கொண்டருளும் முருகப்பெருமான் திருவடிகளைப் பிரார்த்தித்து விண்ணப்பஞ்செய்கிறோம்.

**சுவாமிநாத - இராஜேந்திரக்குருக்கள்**
ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம்
நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அனுதாபச் செய்தி

சிவஸ்ரீ பால சுந்தரக்குருக்கள் வைத்தியநாதக்குருக்கள் அண்மையிற் சிவபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த துயரம் அடைந்துள்ளோம். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அவரது பிரிவினால் ஆறாத்துயரில் இருக்கும் அவரது துணைவியார், அவரது பிள்ளைகள் அனைவர்க்கும் உயர் வாசற் குன்று முருகன் ஆலயத்தின் சார்பில் அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

''ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதம் கச்சி ஏகம்பனே''

என்னும் பட்டினத்தார் கூற்றினை நினைந்து அன்னார் செய்த தொண்டினை, சேவையினைத் தொடர்ந்து அவர் செல்வக் குமாரர்கள் செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்
தங்கள் அன்பர்
நாகராஜா

**Brittania Hindu (Shiva) Temple Trust**

**Highgatehill Murugan Temple**

**200 Archway Road London N65BA.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஜ்ஜோதியில் சங்கமமாகிய

ஊரெழு

# சிவஸ்ரீ பாலசுந்தர வைத்தியநாத சிவாச்சாரியார்

ஊரெழுவில் ஒரு உத்தமமான ஆசாரிய பரம்பரையில் உதித்தவர் சிவஸ்ரீ பாலசுந்தர வைத்தியநாதக் குருக்கள். இவருடைய தகப்பனாரும் பெரியதகப்பனாரும் பிரசித்திபெற்ற சிவாசாரியர்களாக விளங்கினார்கள். ஊரெழுக் குருக்கள்மார் என்றாலே உடன் அகில உலகமும் இவர்களைப் புரிந்துகொண்டிருந்தது. இவர் இருவரையும் விஞ்சக்கூடிய விதத்தில் தன்னுடைய ஆத்மார்த்த பூஜையினாலும் கிரியா வல்லமையினாலும் பிறரோடு இனிமையாக அன்போடு பழகுகின்ற சுபாவத்தினாலும் சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் உத்தம சிவாச்சாரியாராகத் திகழ்ந்தார்

ஈழவள நாட்டிலும், மற்றும் இந்திய மண்ணிலிருந்து இங்கு வந்து கிரியைகள் நடாத்திய இந்திய சிவாச்சாரியர்களோடும் தங்கள் தங்களுக்கே உரித்தான பாணியோடு கும்பாபிஷேகங்கள் நடாத்திக்கொண்டு இருக்கின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலரகமான விசேஷ சிவாச்சாரியர்களோடும் நான் சேர்ந்து கடைமையாற்றியிருக்கிறேன். பத்ததிகள் வாசித்திருக்கிறேன். ஆனால் உண்மையில் நான் வைத்தியநாதக் குருக்களுக்கு பத்ததி வாசிக்கும் போது ஒரு இன்பமயமான உணர்வை வேறு எவரிடமும் பெறமுடியாத ஒரு ஒற்றுமையை உணர்ந்திருக்கிறேன். கிரியைகளை கண்ணும் கருத்துமாக இருந்து செய்யும்பொழுது நானும் அதை ரசித்து அவருடன் ஒன்றிப்போன நிலைகள் பலதரம் ஏற்பட்டிருக்கின்றது.

இவருடைய சிவப்பொலிவான தோற்றம் யாரையும் ஏனைய சிவாச்சாரியர்களையே அவரைப் பணிய வைத்திருக்கிறது. அவர் வந்தவுடன் அவரை வீழ்ந்து வணங்கும்படி எங்கள் உள்ளுணர்வு தூண்டும். அவ்வளவு பெருமைமிக்க தோற்றப் பொலிவு கொண்டவர்கள். மஹா கும்பாபிஷேகங்களில் பிரதான கும்பங்களோடு தர்ப்பையை தாங்கியபடி வரும்பொழுது அவரையும் கடவுளாக நினைக்கத்தூண்டுமே ஒழிய சாதாரண மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக நினைக்கத் தோன்றாது. இனி மூலாலயத்தில் இறைவனுடைய பிராணாதி பிரதிஷ்டைகள் மூலமந்தர ஆவாஹனங்கள் முதலியனவற்றை இவர் செய்யும்போது தன்னிடமுள்ள சக்திகளையெல்லாம் ஒன்றுதிரட்டி அந்த பிம்பத்தில் இறக்குவது போல் பலமான, ஸ்திரமான அநுக்கிரகம் ஏற்படக்கூடிய விதத்தில் அந்த ஆவாஹனம் அமையும் இது அவருக்கேயுரிய தனிச் சிறப்பாகும்.

அவர் மறைந்ததும் அவர் சிவத்துடன் ஐக்கியமாகியிருக்கிறார் என்று என் மனத்தைத் தேற்றிக்கொள்கிறேனே ஒழிய என்னால் அவருடன் பழகிய, அவரோடு கூடக் கருமமாற்றிய நாட்களை மறக்கமுடியாது. கிரியைகள் ஆற்றும்போது அவர் உயர்ந்தவராக நான் ஆராதிக்கும் குருவாகத் திகழ்ந்தார். சாதாரண சமயங்களில் இறைவன் அவதாரம் செய்வதுபோல் என்னிடம் தோழமையாக அன்புடன் பேசுவார். அவையெல்லாம் ஆகம நுணுக்கங்களைப் பற்றியும் யாகாக்கினிகள், மஹா கும்பாபிஷேகங்களின் விரிவான கிரியைகள், மஹோத்சவம் பற்றிய விஷயங்களாகவே அமையும். இன்றும் அவர் என்னிடம் பேசிக்கொண்டிருப்பது போலவே என் உள்ளுணர்வு உணர்த்துகிறது.

அவருடைய வாழ்நாளின் பிற்பகுதியில் அவருக்கு இரு கண்களாக அவருடைய சகதர்மினியும் கனிஷ்ட புத்திரன் சபேசனும் உறுதுணையாக நின்றார்கள். தன்னுடைய ஆற்றலின் பெரும்பகுதியை மகன் சபேசனிடம் அவர் அளித்திருக்கிறார் ஒரு கும்பாபிஷேகத்தில் முன் ஏற்பாடாகச் செய்யவேண்டிய பல காரியங்கள், அனுக்ஞைமுதல் - மஹாபிஷேகம் ஈறாகச் செய்யவேண்டிய எல்லாக் கிரியைகளின் விபரங்களையும் அவர் சபேசனுக்கு உணர்த்தியிருக்கிறார். எல்லா ஏற்பாடுகளையும் தன் தகப்பனார் திருப்திப்படும் வண்ணம் முன்னதாகவே செய்து வைக்கும் திறமை சபேசனுக்கு இருந்தது. ஆகவே பிற்காலத்தில் குருக்கள் அவர்கள் அதிகம் சிரமப்படவேண்டி இருக்கவில்லை. அவர் சகதர்மிணி அவருக்கு ஆற்றிய சேவைகள் சொல்லிலடங்காது. அவரை ஒரு குழந்தைபோல் பாவித்து அவருக்குத் தேவையானவற்றை அந்த அந்த நேரங்களில் செய்துகொடுத்து வந்திருக்கிறார்.

''பதிம் ஏகாதசம் இருதிம்'' என்று ஒரு மந்திரமிருக்கிறது. ஒரு பிராமணப் பெண் பத்து குழந்தைகள் பெற்று பின், தன் கணவனை பதினோராவது குழந்தையாக நினைக்கவேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்பது அதன் கருத்து. அதன்படி பிற்காலத்தில் தன் பர்த்தாவை ஒரு குழந்தையாகவே நினைத்து அவருக்கு சிசுரானடி செய்தார் அவ்வம்மையார் குருக்கள் அவர்கள் சிவப்பேறு பெற்றிருக்கிறார் என்று உணர்ந்து அவர்கள் இருவரும் தம்மைத் தேற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏன் அவர்கள் குடும்பத்தினர் அனைவருமே குருக்கள் அவர்களின் நிறைவான பூரணமான வாழ்வை நினைத்து தம்மைச் சாந்தப்படுத்திக் கொள்ளவேண்டும். காசிவரை சென்று, கர்மபலன் தீர்த்து விப்பரபூசை செய்து தமது ஆத்மாவை சிவ ஐக்கியமாக்கிய பெரும்பேறு வைத்யநாதக் குருக்களைத் தவிர வேறு யாருக்குக் கிடைக்கும்.

அவருக்கு ஆத்மாஞ்சலி செய்வது ஒன்றுதான் நாம் செய்யக் கூடியது.

''சிவாகம ஞான பாஸ்கரன்''

**சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்**

(தர்மசாஸ்தா குருகுல அதிபர்)

காயத்திரி பீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புச் சகோதரன்

மனத்தை உடையவன் மனிதன் ஆவான். மனிதனின் மனத்தை உயர்ந்த நிலையில் வைப்பதனால் மனிதனுடைய வாழ்வு வளமாக அமையும் மனிதனுடைய வாழ்வு வளமாக இருப்பதற்காக நம்முடைய முக்காலமும் உணர்ந்த முனிவர்கள் கடவுளை வழிபடும் மார்க்கமாகிய சமயம் போன்ற மார்க்கங்களை அமைத்து அதன் மூலமாக அவனுடைய வாழ்க்கை முறைகளை சமயத்துடன் தொடர்பு படுத்தினார்கள். நாம் வாழும்-வாழுகின்ற இந்து சமயத்தில் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எம்மை இறைவனுடன் தொடர்பு படுத்துபவராக இருப்பவர் தான் குரு. குரு என்பவர் அஞ்ஞானமாகிய இருளை அகற்றி ஞானமாகிய அறிவைத் தருபவர் ஆவர். இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊரெழு என்னும் கிராமத்தில் குருபாரம்பரியமாகிய வழியில் உதித்தவர் தான் அண்மையில் சிவனுடன் ஐக்கியமானவராகிய மதிப்புக்குரிய சிவஸ்ரீ பாலசுந்தரக்குருக்கள் வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்களுடைய வாழ்ந்த வாழ்க்கை முறையானது எமது சமுதாயமாகிய அந்தணர்களுக்கும், சைவசமய மக்களுக்கும் சிறந்த உதாரண புருஷராக சிறந்து விளங்கினார் என்றால் மிகையாகாது. வேதம் ஓதல், வேதம் ஓதுவித்தல், தானம் வாங்கல், தானம் கொடுத்தல், இறைவனை தான் வணங்குதல், இறைவனை மற்றவர்களைக் கொண்டு வணங்குவித்தல் ஆகிய ஆறு தொழில்களைச் செய்பவர்களே அந்தணர் ஆவர். இந்த ஆறு தொழில்களையும் எம்முடைய குருமூர்த்தம் உபநயனக் கிரியை பூர்த்தியான முதல் தன் உடம்பில் உயிர் இருக்கும் வரை சீரும் சிறப்புமாக செய்திருக்கிறார்கள். எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் சக்தியுடன் நடை பெற்றது என்றால் மிகையாகாது. அவருடைய உடம்புத் தோற்றத்தைப் பார்த்தவுடனே விநாயகப் பெருமானைப்பார்த்த நினைவு வருதலால் விநாயகரே அந்த இடத்தில் வந்துவிட்டதாக நினைப்பார்கள். எம்முடைய பக்த அடியார்கள் சிவாச்சாரியாருடைய பெயரை நினைக்கும் போது கூட நம்முடைய ஆன்மாவைப் பற்றி நிற்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களாகிய நோயைத் தீர்ப்பவராகிய சிவபெருமானுக்கு வைத்திய நாதர் என்றும் காரணப் பெயர் உள்ளது. அப் பெயரையே ஐயாவினுடைய பெற்றோர்கள் நாமகரணம் சூட்டினார்கள். பெயருக்கு ஏற்றவாறு அடியார்களுடைய நோய்களை எல்லாம் விபூதி என்னும் மருந்து கொடுத்து நீக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவர் சித்திரம் கீறுவதிலும் மிகவும் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் செய்யும் மகோற்சவத்தில் கொடிச்சீலையில் வரையும் படங்களைக்கொண்டு இவர் திறமையை அறியக் கூடியதாக உள்ளது குரு மூர்த்தத்துடன் சம்பாசனை செய்யும் போது கூட ஒரு வார்த்தையை அடிக்கடி கூறிக் கேட்போரின் மனதை தன் வசப்படுத்தி பிரச்சினைகளை இலகுவாகத் தீர்ப்பதிலும் வல்லவராக உள்ளார் இந்த வார்த்தை என்னவென்றால் "ஓம் சரிதான்," இந்த வார்த்தையை சிந்தித்துப் பார்க்கும் போது 'ஓம்' விநாயகப் பெருமானின் ஏகாச்சர மந்திரமாகத் திகழ்கின்றது. மனதில் ஏற்படும் எண்ணம் வாய் மூலமாகச் சொல்லாக வருகிறது. மனதில் எப்பொழுதும் விநாயகர் எண்ணமாக இருப்பதனால் இவ்வாறு வார்த்தை வருகின்றது.

இவ்வாறு பல பெருமைகளைத் தன்னுள் அடக்கியவராகிய அண்மையில் மறைந்த சிவஸ்ரீ பால வைத்தியநாத சிவாச்சாரியாரின் மறைவு சைவ உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தனை செய்வோமாக.

சுபம்

இங்ஙனம்.
அன்புள்ள சகோதரன்
சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவஸ்ரீ பாலவைத்தியநாத சிவாச்சாரியார்

# திருவடிகளுக்கு எமது அஞ்சலி

" அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் "

என்பது வள்ளுவர் வாய்மொழி. இக்குறட்பாவில் குறிப்பிட்டபடி தனது சீரிய செந்தண்மை வாழ்வால் அந்தணர் குலத்துக்குப் பெருமை தேடித் தந்தவர் அமரர் பால வைத்திய நாத சிவாச்சாரியார் அவர்கள். அறிவிலே தெளிவும், ஆசார சீலமும், சிவபூசை மாண்பும் ஒருங்கமையப் பெற்றவர் இவர். இவருடைய மறைவு சைவ உலகுக்குப் பேரிழப்பாக அமைந்து விட்டது.

" இடப்பக்கம் சிறிது நோவுதென்றார்
கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே "

என்ற திருமந்திர வாக்குக்கேற்ப இவருடைய நன்மரணம் அமைந்துவிட்டது. ஊரெழுப்பதியில் இருந்து சைவஉலகம் முழுவதையும் தனது அருட்கடமைகளினால் ஈர்த்துக்கொண்ட பெருமை இவருக்குண்டு. அந்தணர்களுக்குரிய அருமறை ஆறங்கம் ஆகியவற்றினால் தனிச்சிறப்புப் பெற்ற சிவாச்சாரியார் இவர். தலயாத்திரையினாலும் புண்ணியதீர்த்தங்களின் திருமுழுக்கினாலும் தனிச்சிறப்புப்பெற்ற பெருமையும் இவருக்கு உண்டு. சைவமக்களின் புண்ணிய க்ஷேத்திரமாக விளங்கும் "வாரணாசி" என்ப்படும் காசித் தலத்துக்குச் சென்று கங்கையில் நீராடி விசுவநாதப் பெருமானையும் விசாலாட்சி அம்பாளையும் வழிபட்டு மீண்டமை இவர்வாழ்வில் குறிப்பிடத்தக்க அருள் நிகழ்வாகும்

யாழ் குடாநாட்டின் ஓரங்கமாக விளங்கும் தீவுப்பகுதிகளிலே நடைபெற்ற மகோற்சவம், கும்பாபிஷேகம் ஆகியவற்றுக்குத் தலைமை தாங்கிப் பல்லாண்டுகாலமாக நடாத்திவந்த சிறப்பையும் யாவரும் அறிவர். பொலிவுபெற்ற உள்ளமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பும் இத்தகைய அருள்நிகழ்ச்சிகளுக்கு மிகவும் வரவேற்கக் கூடியதாக அமைந்தமை கண்கூடு. சைவஉலகம் இவற்றை எல்லாம் இன்று இழந்துநிற்கின்றது. இத்தகைய பேரருளாளர்களின் இடத்தை நிரப்ப யாரால்தான் முடியும்? எனவே அனைத்தையும் தாங்கும் உள்ளத்தைச் சைவமக்களுக்கு இறைவன் தான் தந்தருளவேண்டும். இந்நிலையில் திருக்கோயில்களும் சைவவிழாக்களும் மேலும் மேலும் பொலிவிழந்து போகாமல் பேணிக்கொள்ளவேண்டியது சைவ அபிமானிகளின் இன்றியமையாத கடமையுமாகும். ஊரெழு வைத்தியநாதக் குருக்கள் போன்ற பிராமண உத்தமர்கள் நம்மத்தியில் தோன்றவேண்டும் என்றும் பிரார்த்திப்பதும் எமது தலையாய கடனாகும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருவ நட்சத்திரம் திடீரென மறைந்துவிட்டது

தோன்றின் புகழொடு தோன்றுக — அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று.

அன்பும் பண்பும் அறிவும் அழகும் புன்சிரிப்பும் ஒருங்கே அமைந்த நடமாடும் தெய்வாம்சம் நிறைந்த எங்கள் குரு பிரம்மஸ்ரீ பிரதம குரு சிவாகம கிரியா ரத்தினம் சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்களின் திடீர் மறைவு அனலை மக்களின் இதயத்தில் நீக்கமற நின்று மிளிர்கிறார். அன்னாரின் ஊன் உடல் இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்டாலும் அன்னாரின் புகழ் உடம்பு மணிவாசர் போல் என்றும் மறையவே மறையாது என்றென்றும் ஒளி வீசிக்கொண்டிருப்பார்

1992-ம் ஆண்டு தீவகப் போக்குவரத்து முற்றாகத் தடை செய்த காலை ஐயனார் கொடி ஏற்றம் செய்தே ஆகவேண்டும் என்ற நீங்கா நினைவுடன் இருந்த ஐயா அவர்களை ஐயனாரே ஆஞ்சநேயர் உருவில் வந்து தன் தோழில் ஔடதமலையைச் சுமந்த மாதிரி பிராயச்சித்த வேளை மாலை சரியாக ஏழுமணிக்கு ஐயன் முன்றில் கொண்டு இறக்கிவிட்டான். இந் நிகழ்ச்சி ஆங்குநின்ற மெய்அடியார்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். சக்தி வடிவில் நின்று சிவனை வழி நடத்திய துணைவியாரை அனைவரும் கைகூப்பிய காட்சி என்றும் மறக்க முடியாது. எங்களால். இப்பேற்பட்ட பெருமகரை ஐயனார் இடத்தில்வைத்து இன்றும் என்றும் அருவுருவில் வணங்குகின்றார்கள் அனலை மக்கள்

ஐயா அவர்கள் தன் புன்சிரிப்பால் ஆலயங்களில் நடைபெறும் சிறுசிறு சலசலப்பை நிவிர்த்திசெய்து அனைவரையும் அரவணைத்ததை என்றும் நாங்கள் மறக்கமுடியாது. அப்பேற்பட்ட கருணைக் கடல் வற்றி வறண்டாலும் ஐயாவின் இன் சொல் புத்திர சிகாமணிகள் ஐயா வழிநின்று தீபம் அணையாது காத்து வரவேண்டுமென்று அனலை வாழ் மெய் அடியார்கள் அன்புடன் ஆர்வமுடன் வேண்டுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி
இவன்தந்தை என்நோற்றான் கொல்லெனும் சொல்

ஐயா அவர்கள் தன் பங்கையும் கடமையையும் உலகம் போற்ற வாழ வைத்துவிட்டார்

தந்தை மகற் காற்று நன்றி
அவையத்து முந்தி இருப்பச்செயல்

ஐயா அவர்களின் திடீர் மறைவினால் துயரும் அன்பும் அருளும்கொண்ட இனிய துணைவியார் அவர்கட்கும் அன்புப் பிள்ளைகட்கும் அனலை வாழ் அடியார்கள் அனைவரும் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்

**அனலை பிள்ளையார் கோவில் பரிபாலனசபையார்**
**புளியந்தீவு நாகேஸ்வரன் (சிவன்) ,, ,,**
**ஐயனார் கோவில் ,, ,,**
**முருகன் கோவில் ,, ,,**
**எழுவங்கு நாச்சிமார் ,, ,,**
**வடலூர் இராசராசேஸ்வரி ,, ,,**
**காளி கோவில் ,, ,,**
**வைரவர் கோவில் ,, ,,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தன்மையாளர்

ஊரெழு சிவஸ்ரீ பால. வைத்தியநாதக் குருக்கள் ஐயா அவர்களினது பிரிவினைக் கேட்டதும் நான் மிகவும் வேதனைப் பட்டேன். அவர் என்னுடன் 1943 ஆம் ஆண்டிலிருந்து அறிமுக மானவர். பிரபல்யமான குரு பரம்பரையில் உள்ளவர். வேத ஆகம சாஸ்திரங்களை நன்கு அறிந்தவர். பரம்பரை விசேடத் தாலும், தக்காரிடம் முறையாகக் கல்வி பயின்றமையாலும் இவர் தலைசிறந்த சிவாச்சாரியார்களுள் ஒருவராகத் திகழ்ந்தார் மதிப்பைப் பெற்றார் இவர் தமது குலஒழுக்கத்திலும், சந்தியா வந்தனம் சிவ பூசை என்பவற்றிலும் தவறியதில்லை. பல ஆலயங் களில் பிரதிஷ்டை, உற்சவாதிகளைச் சிறப்பாகச் செய்து நிறை வேற்றியும், தீக்ஷை, உபநயனம், விவாகம் ஆகிய கிரியை களையும் பற்பல இடங்களில் செய்தும், எமது ஆலய மகா கும்பாபிஷேகம், மகோற்சவம் என்பனவற்றையும் சிறப்பாக நடாத்திப் புகழ்பெற்று எல்லோர் மனத்திலும் இடம்பிடித் தவர்.

அண்மைக்கால இடப்பெயர்வின்போது எமது ஆலயத்திற்கு வந்து, விபரீதம் எதுவும் நடவாவண்ணம் தினசரி அம்பாளுக்கு சகஸ்ரநாம தோத்திர பாராயணம் செய்து, எம்மையும் ஊர் மக்களையும் காத்த பெருந்தகையாவர் எங்கள் கோவிலின் 1998 மார்கழி மகோற்சவ நிகழ்வைப் பற்றி அம்பிகை குருவின் மனதில் புகுந்து திருவாக்கு அளித்தமை இக்கோயிலின் நடை முறைக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

"தங்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்ற நாவுக்கரசரின் வாக்கை சிரமேற்கொண்டு இறுதிமூச்சு வரை சிவாலயப்பணியிலே ஈடுபட்டு, நாவுக்கரசர் முத்திபெற்ற புனிதத்தினமான சித்திரைச் சதய நன்னாளில் எங்கள் குருக்கள் ஐயா அவர்களும் தம்கடன் முடித்து மறுமைக் கடனுக்காக நம்மைப் பிரிந்த பிராமணோத்தமருக்கு நாம் செய்யும் கடன், அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவியின் பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து நிற்பதேயாகும்.

இங்ஙனம்

பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் மட்டுவில். — சி. சிவகுரு (தர்மகர்த்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திற்கே பெருமை சேர்த்த

# சிவநெறிச்செல்வர்

ஈழத் தமிழர்களின் வரலாறு உலக வரைபடத்தில் துலக்கமாகப் பதியப்பட்டுவரும் காலமிது. காலக்கண்ணாடியில் அவலங்கள், அகதிகள், அலங்கோலங்கள் ஒருபுறமும், சாதனைகள், பாராட்டுகள், எழுச்சிகள் மறுபுறமும் காட்சியளிக்கும் காலமாகும்.

சைவத்தமிழ் உலகில் சைவத்திற்கும் தமிழுக்கும் ஏற்றம் கண்டவர்கள தமிழகத்திற்கு இணையாக ஈழவளநாட்டிலும் வாழ்ந்தார்கள் என்ற பெருமை எமக்கு உண்டு. தமிழ் அரசர்கள் கலைக்கோயில்களாகக் கட்டியெழுப்பிய மாபெரும் இந்துக் கோயில்கள் தமிழகத்தில் உண்டு. இதேபோல் பெருமை சேர்த்த சிவாச்சாரியார்களையும் உருவாக்கித் தந்தார்கள். வேதாகம பாடசாலைகள் மூலம் புதியவர்களும் உருவானார்கள். ஈழத்தவர்களும் அங்கு சென்று கற்றுவந்தார்கள். இந்த வகையில் தமிழகத்தின் இன்றைய ஆச்சாரியர்களை விஞ்சும் வகையில் உலகளாவிய ரீதியில் ஈழத்து சிவாச்சாரியர்கள் உயர்ந்து நிற்பதை உலகம் கண்டு வியக்கிறது. இந்த வகையில் அண்மைக்காலங்களில் கொடிகட்டிப் பறந்தவர் சிவஸ்ரீ பா. வைத்தியநாதக்குருக்கள் அவர்கள்.

பிராமணோத்தமர்களை உருவாக்கிய ஊர்களில் ஊரெழுப்பதியும் ஒன்று. அப்பெருங்குடியில்வந்து சைவத்திற்கு உலகளாவியரீதியில் பெருமை சேர்த்த பெரிய குருக்களாக வாழ்ந்தவர் அமரர் குருக்கள் அவர்கள் ஈழத்திலும் தம் முத்திரையைப் பதித்தவர்.

வேதாகமத்துறையிலே ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர் பெற்றிருக்கவேண்டிய அறிவைவிட, ஆய்வு அறிவைவிட அமரர் மிகுதியாகப்பெற்றுத் திகழ்ந்தார். சிறந்த நன்மாணாக்கர்களை உருவாக்கித்தந்த பெருமை அன்னாருக்கு உண்டு. அன்னாருக்கு உலகச் சைவத்தமிழர்களிடையே ஏற்பட்டிருந்த ஏற்றத்தை, எடுப்பான குருத்துவத்தலைமைத் தகுதியை, உண்மையான உயர்வை எவராலும் சாய்க்கமுடியாதிருந்தது, பட்டங்கள் பல அவரை வந்தடைந்து தமக்குப் பெருமை தேடிக்கொண்டன.

ஒருவரது தனித்தன்மை அவரது குணநலத்தால் மாத்திரம் விளங்காமல் அவரது செயற்பாட்டில்தான் தனித்தன்மை விளங்கும் (One's individuality is revealed not only in character but also in the ways he acts) என்பதற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" He has gone through fire and water " என்பார்கள். அவர் நீரில் நீந்தியிருக்கிறார்; நெருப்பில் குளித்துமிருக்கிறார் சைவத்தமிழ் மக்களுக்கு குளிர்தருவதாக விளங்கிய வரலாற்று நாயகனை வீட்டுத் தலைவனாகக்கொண்ட வரலாற்றுக் குடும்பம். நெருப்பாகச் சுட்ட வேதனை, பெரும் புயலாக எழுந்த சோதனை, ஏற்றம், இறக்கம் எதையும் ஒரே மாதிரி ஜீரணித்து அமரரின் ஆரோக்கியத்திற்கு மாமருந்தாக இருந்தவர் அவரது குடும்பத்தார். அவர்களின் விருந்தோம்பலே தனிரகம்; சொல்லுந்தரமன்று.

தோண்டினால் தங்கந்தான். தீண்டினால் சிங்கமாகக் காட்சிதரக்கூடியவரென்றாலும் சைவக்குருக்களுக்கேயுரிய தோற்றப்பொலிவுடன் எந்நேரமும் காட்சிதரும் நைட்டியப் பிராமணக்குருக்கள். இடுக்கண் வந்துற்றபோதும் இம்சைகள் வந்தடைந்தபோதும் கொவ்வைச் செவ்வாயின் குமிண்சிரிப்பால் அவற்றைப் போக்கடிக்கும் வல்லமை இயல்பாகவே வாய்க்கப் பெற்றவர். சினம் அறியார்; சீற்றம் கொள்ளார்; நிறைகுடப் பொறுமை; 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாம்' என்ற பாரதியின் கூற்றிற்கு விளக்குப்பொலிவூட்டியவர்.

கால்நூற்றாண்டுக்கு மேற்பட்ட குடும்ப அந்நியோந்நியம் எமக்கு உண்டு. எவ்வளவோ எழுதலாம். விரிவஞ்சி விடுத்தோம் என்க.

'அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராகக் கொளல்' என்ற வள்ளுவத்திற்கேற்ப எமக்கு வந்து வாய்த்தது அன்னாரது தொடர்பு. இக்குடும்ப நல்லுறவு தலைமுறை இடைவெளியின்றித் தொடர அவரது குடும்பத்தில் எம்மையும் இணைத்துப் பார்க்கும் பக்குவம் அன்னாரது நங்கை நல்லாளுக்கும், பிள்ளைகளுக்கும் மருமக்களுக்கும், பெறாமக்களுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும், இனத்தவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறதென்றால் எங்கள் கேண்மைப்பிணைப்பு இருந்தவாறு. எங்கள் எல்லோருக்கும் அமரரின் இழப்பு தாங்க முடியாத துயரத்தைத் தருவதாகும்.

தன்னையறிந்த தலைவனான அமரர் இறப்பதற்கு முன்னர் மேற்கொண்ட காரியங்கள் மூலம் மரணத்தை எதிர்கொண்ட விதம் வியக்கத்தக்கது அன்னாரது இழப்பு சைவத் தமிழ் உலகத்திற்கு ஈடுசெய்யமுடியாததாகும்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உரும்பிராய் — அ. க. த. கிருஷ்ணராசா (ஜே. பி.)
25 - 04 - 98 — தலைவர் வலி. கிழக்கு தென்பகுதி
ப. நோ. கூ. ச. நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

இறைவன்
திருவருளால்
எங்கள் குடும்பத்தின்
தலைவராகவும், சிவாச்சார்ய
ராகவும். சிவபூஜா துரந்தரராகவும்
வாழ்ந்து எண்ணிலாக் கடமைகளால்
எல்லோர் இதயக் கமலங்களையும் மலர்த்தி
71 ஆவது வயதில் சிவபதம் அடைந்த அன்னாரின்
மறைவு கேட்டு உடன் வந்து ஆறுதலளித்த அன்பு
நெஞ்சங்களுக்கும், உரிய வேளையில் கருமமாற்றிய
உள்ளங்களுக்கும், இறுதிக்கிரியைகளிலும், ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் கலந்து சிறப்பித்த உற்றார்,
உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இரங்க
லுரைகள், அனுதாபச் செய்திகள் அனுப்பி
யோருக்கும், வெளிநாடுகளில் இருந்து
அனுதாபச் செய்திகள் அனுப்பி
யோருக்கும், இன்றைய
தசாகக் கிரியைகளில்
பங்குபற்றியோர்
யாவருக்கும்
எமது
**மனம் நிறைந்த நன்றி உரித்தாகுக.**

அம்மன் கோவிலடி,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

அன்பிற்கினிய
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org